# மேக்னா குளோபல் ரெக்ரூடிங் தனியுரிமை தகவல்

எங்கள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, மேக்னா இன்டர்நேஷனல் இன்க். மற்றும் அதன் துணை நிறுவனங்கள் ('மேக்னா' அல்லது 'எங்கள்' அல்லது 'நாங்கள்' என்றும் குறிப்பிடப்படுகின்றன), உங்கள் தனிப்பட்ட தரவைச் சேகரித்து செயலாக்குகின்றன.

உங்கள் தனிப்பட்ட தரவின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பு எங்களுக்கு மிகவும் முக்கியமானது. உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் எவ்வாறு சேகரித்து செயலாக்குகிறோம் என்பது குறித்து வெளிப்படைத்தன்மையுடன் இருக்கவும், தரவு பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் உயர் தரங்களைப் பின்பற்றவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

இந்தத் தகவலின் நோக்கம், எங்கள் ஆட்சேர்ப்புச் செயல்பாட்டின் போது உங்கள் தனிப்பட்ட தரவைச் செயலாக்குவதற்கான காரணங்கள் மற்றும் முறைகள் பற்றிய தகவல்களை உங்களுக்கு வழங்குவதாகும். இதில் உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் யாருடன் பகிர்ந்து கொள்ளலாம், எவ்வளவு காலம் அதை நாங்கள் வைத்திருப்போம், அதன் செயலாக்கம் தொடர்பாக உங்களுக்கு உள்ள உரிமைகள் பற்றிய விவரங்கள் அடங்கும்.

## I.உங்கள் தனிப்பட்ட தரவை செயலாக்குவதற்கு யார் பொறுப்பு?

நீங்கள் விண்ணப்பிக்கும் மேக்னா நிறுவனம், தனிப்பட்ட தரவு என்ன சேகரிக்கப்படுகிறது மற்றும் அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கட்டுப்படுத்துகிறது. சில நாடுகளில், இது "கட்டுப்பாட்டாளர்" என்று குறிப்பிடப்படுகிறது.

மத்திய பொறுப்புத்துறை:

**மேக்னா இன்டர்நேஷனல் இன்க்.**
337 மேக்னா டிரைவ்,
அரோரா, ON L4G 7K1, கனடா
மின்னஞ்சல்: talentattraction@magna.com

கீழே உள்ள மின்னஞ்சல் முகவரி வழியாக மேக்னாவின் தரவு தனியுரிமை மற்றும் பாதுகாப்பைத் தொடர்பு கொள்ளலாம். உங்கள் காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், குழு உங்கள் கோரிக்கையை பொறுப்பான தரவு பாதுகாப்பு அதிகாரிக்கு அனுப்பும்.

மின்னஞ்சல்: dataprivacy@magna.com

பொருந்தக்கூடிய சட்டத்தால் அனுமதிக்கப்பட்டபடியும், இந்தத் தரவு தனியுரிமைத் தகவலின்படியும், செயல்திறன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, உங்கள் தகவல்களைச் செயலாக்க, மேக்னா நிறுவனங்கள் உள்கட்டமைப்பு, அமைப்புகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பகிர்ந்து கொள்கின்றன என்பதை நினைவில் கொள்ளவும். இது எங்கள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கு அவசியம்.

### II. நாங்கள் என்ன தனிப்பட்ட தரவை செயலாக்குகிறோம்?

உங்கள் தனிப்பட்ட தரவின் பின்வரும் வகைகளை நாங்கள் செயலாக்கலாம்:

- தொடர்புத் தகவல் (எ.கா. மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி எண், வீட்டு முகவரி)

- அடையாளத் தரவு (எ.கா. பெயர், பிறந்த தேதி, தேசிய அடையாள அட்டை எண், பணி அனுமதிகள்)
- மக்கள்தொகை தரவு (எ.கா. வயது, பாலினம், திருமண நிலை, கல்வி நிலை)
- தணிக்கை கேள்விகளுக்கு வழங்கப்பட்ட பதில்கள் தொடர்பான தகவல்
- பின்னணி சோதனைகளை நடத்துவதன் மூலம் பெறப்பட்ட தகவல் (எ.கா. தொழில்முறை சமூக ஊடகத் திரையிடல், குறிப்புகள், குற்றப் பதிவு வரலாறு போன்றவை)
- உங்கள் விண்ணப்பம் அல்லது அட்டை கடிதத்தில் சேர்க்கப்பட்டுள்ள தகவல் (வேட்பாளர் படங்கள், இணைக்கப்பட்டிருந்தால் உட்பட)
- கல்வி மற்றும் முந்தைய வேலைவாய்ப்பு பற்றிய தகவல்
- உங்கள் பணி விருப்பத்தேர்வுகள் பற்றிய தகவல் (எ.கா. விரும்பிய சம்பளம், இடமாற்றம் செய்ய விருப்பம்)
- வேலை நேர்காணல் விவரங்கள் மற்றும் நீங்கள் முடிக்கும் எந்தவொரு மதிப்பீடுகள் அல்லது பயிற்சிகளின் முடிவுகள்
- வேட்பாளர்களைப் பற்றிய முன்-வழங்கல் தகவல் (சில அதிகார வரம்புகளில்)
- பயணத் தொடர்பான பதிவுகள் (எ.கா. பயணத் திட்டங்கள், போக்குவரத்துப் பதிவுகள், ஹோட்டல் முன்பதிவுகள், பயணச் செலவுகள், பணி விசாக்கள் அல்லது விசா விண்ணப்பங்கள்)
- ஏதேனும் சிறப்புத் தேவைகள் அல்லது சுகாதார நிலை
- குக்கீ தகவல் (மேலும் தகவலுக்கு அத்தியாயம் XIII ஐப் பார்க்கவும்)
- நீங்கள் எங்களுக்கு வழங்கும் வேறு ஏதேனும் தகவல்

இது அனைத்தும் உள்ளடக்கிய முழுமையான பட்டியல் அல்ல என்பதை நினைவில்கொள்ளவும், மேலும் செயலாக்கப்படும் தனிப்பட்ட தரவின் குறிப்பிட்ட வகைகள் அந்தந்த சூழ்நிலைகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பொறுத்து மாறுபடலாம்.

## III. உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் எங்கே பெறுகிறோம்?

பொதுவாக, தனிப்பட்ட தரவு உங்களிடமிருந்து நேரடியாக சேகரிக்கப்படும். எங்கள் வேலை போர்டல் வழியாக, உங்கள் விண்ணப்பக் கடிதத்தில், CV இல் அல்லது ஒரு நேர்காணலின் போது இந்தத் தகவலை நீங்கள் வழங்கும்போது இது நிகழலாம்.

வேலைவாய்ப்புக்கு முந்தைய ஸ்க்ரீனிங் செயல்முறை போன்ற குறிப்பிட்ட சூழ்நிலைகளில், பின்னணி சரிபார்ப்பு வழங்குநர்கள் போன்ற பிற மூலங்களிலிருந்தும் உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் பெறலாம். இந்தத் தகவலைப் பெறும்போது பொருந்தக்கூடிய தரவு பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை நாங்கள் கடைப்பிடிக்கிறோம் என்பதை உறுதிப்படுத்திக்கொள்கிறோம்.

எங்கள் நிறுவனத்தில் நீங்கள் வேலை செய்ய ஆர்வம் கட்டியிருந்தாலோ அல்லது நீங்கள் ஆர்வம் தெரிவித்து இன்னும் வேலைக்கு விண்ணப்பிக்காமல் இருந்தாலோ, நீங்கள் எதிர்காலத்தில் எங்கள் நிறுவனத்தில் சேருவதற்கான வாய்ப்புள்ள பணியாளராக (சாத்தியமான பணியாளர்) கருதப்படலாம். அப்படியானால், உங்கள் அடிப்படைத் தகவல்கள் (பெயர், தொலைபேசி எண், மின்னஞ்சல், விண்ணப்பம் மற்றும் கல்வி வரலாறு) தேர்வாளரால் எங்கள் வேலை போர்ட்டலில் சேர்க்கப்படலாம் அல்லது எங்கள் வேலை போர்டல் வழியாக நீங்களே அதை உள்ளிட்டிருக்கலாம்.

## IV. உங்கள் தனிப்பட்ட தரவை எந்த நோக்கங்களுக்காக நாங்கள் செயலாக்குகிறோம்?

பின்வரும் நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் செயலாக்கலாம்:

- ஆட்சேர்ப்பு செயல்முறையை நிர்வகித்தல் (எ.கா. வேலை விண்ணப்பதாரரின் மனிதவள அமைப்பை அமைத்தல், உங்கள் விண்ணப்பத்தை நிர்வகித்தல், மதிப்பீடுகளை நடத்துதல், பயண ஏற்பாடுகள் மற்றும் திருப்பிச் செலுத்துதல் உள்ளிட்ட நேர்காணல்களை ஒழுங்கமைத்தல், நேர்காணல் கருத்துக்களை செயலாக்குதல்)

- ஆன்போர்டிங் (உங்கள் விண்ணப்பம் வெற்றிகரமாக இருந்தால் ஆன்போர்டிங் செயல்முறைக்கு உதவுதல்)
- சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக பின்னணி சரிபார்ப்புகள் மற்றும் ஸ்க்ரீனிங்
- பிற வேலை வாய்ப்புகள் குறித்து உங்களுக்குத் தெரிவித்தல்
- பதிவு வைத்தல் மற்றும் அறிக்கை செய்தல் உள்ளிட்ட ஆட்சேர்ப்பு செயல்முறையை பகுப்பாய்வு செய்தல் மற்றும் மேம்படுத்துதல்
- சட்ட உரிமைகோரல்களைப் பயன்படுத்துவதற்கும் அவற்றிலிருந்து பாதுகாப்பதற்கும்
- தகவல்களைச் சரிபார்த்தல் மற்றும் குறிப்புகளைச் சரிபார்த்தல்
- பயன்படுத்தப்பட்ட வாய்ப்பிற்கான பொருத்தத்தை மதிப்பிடுதல்
- சட்டக் கடமைகளுடன் (எ.கா. நிதி, நிர்வாகத் தேவைகள், பணி சரிபார்ப்புக்கான தகுதி) மற்றும் சட்ட அமலாக்க கோரிக்கைகளுடன் இணங்குதல்

இது அனைத்தும் உள்ளடக்கிய முழுமையான பட்டியல் அல்ல என்பதை நினைவில்கொள்ளவும், மேலும் செயலாக்கப்படும் தனிப்பட்ட தரவின் குறிப்பிட்ட வகைகள் அந்தந்த சூழ்நிலைகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பொறுத்து மாறுபடலாம்.

## V. தனிப்பட்ட தரவு செயலாக்கத்திற்கான சட்ட அடிப்படை

உங்கள் தனிப்பட்ட தரவை செயலாக்குவதற்கு நாங்கள் பின்வரும் சட்ட அடிப்படைகளைப் பயன்படுத்துகிறோம்:

- உங்களுடன் நாங்கள் வேலைவாய்ப்பு ஒப்பந்தம் ஒன்றைத் தயாரித்து போட்டுக்கொள்ளவேண்டிய அவசியம் உள்ளது
- எங்கள் சட்டப்பூர்வ கடமைகளுக்கு இணங்க வேண்டிய அவசியம் உள்ளது
- எந்த நேரத்திலும் நீங்கள் திரும்பப் பெறக்கூடிய உங்கள் ஒப்புதல்
- எங்கள் ஆட்சேர்ப்பு மற்றும் பணியமர்த்தல் செயல்முறையை நிர்வகித்தல் மற்றும் மேம்படுத்துதல் அல்லது சட்டப்பூர்வ உரிமைகோரல்களுக்குப் பயன்படுத்துதல் மற்றும் எதிராகப் பாதுகாத்தல் போன்ற எங்களின் நியாயமான நலன்கள். இருப்பினும், எங்கள் நலன்கள், உங்கள் நலன்கள் அல்லது தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு தேவைப்படும் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மீறாமல் இருப்பதை உறுதிசெய்ய, ஒவ்வொரு வழக்குக்கும் தனிப்பட்ட மதிப்பீட்டை நாங்கள் மேற்கொள்கிறோம்.

## VI. உங்கள் தனிப்பட்ட தரவு எங்கு செயலாக்கப்படும்?

உங்கள் தனிப்பட்ட தரவு உங்கள் சொந்த நாட்டிற்கு வெளியே உள்ள நாடுகளில் அமைந்துள்ள மேக்னா துணை நிறுவனங்களுக்கு மாற்றப்படலாம் மற்றும்/அல்லது அணுகப்படலாம். இந்த நாடுகளில் உங்கள் சொந்த நாட்டில் உள்ள அதே அளவிலான தரவு பாதுகாப்பு இருக்காது. இருப்பினும், உங்கள் தரவு எங்கு செயலாக்கப்பட்டாலும் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய மேக்னா தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறது. அனைத்து மேக்னா துணை நிறுவனங்களும் பொருந்தக்கூடிய தனியுரிமைச் சட்டங்களுக்கு இணங்க உங்கள் தனிப்பட்ட தரவைக் கையாள வேண்டியது அவசியம், மேலும் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் ரகசியத்தன்மை கடமைகளுக்குக் கட்டுப்பட்டுள்ளனர்.

விண்ணப்ப செயல்முறையின் ஒரு பகுதியாக, மேக்னா ஆட்சேர்ப்பு குழு, உங்கள் தகவலை மேக்னா குழு முழுவதும் உள்ள வேலை ப்ரொஃபைல்களுடன் ஒப்பிடலாம். இது மற்ற மேக்னா நிறுவனங்களுக்குள் இருக்கக்கூடிய பொருத்தமான வேலை வாய்ப்புகளை அடையாளம் கண்டு உங்களுக்குத் தெரியப்படுத்த உதவுகிறது. வேலைவாய்ப்புப் பொருத்தம் கண்டறியப்பட்டால், உங்கள் ப்ரொஃபைல் - உங்கள் தனிப்பட்ட தரவு உட்பட - உங்களை அந்தப் பதவிக்கு பரிசீலிக்க தொடர்புடைய மேக்னா குழு நிறுவனத்துடன் பகிரப்படலாம்.

## VII. உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் எவ்வாறு பாதுகாக்கிறோம்?

பொருத்தமான தொழில்நுட்ப, நிறுவன மற்றும் நேரடி பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதன் மூலம் உங்கள் தனிப்பட்ட தரவைப் பாதுகாக்க மேக்னா போதுமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் உங்கள் தனிப்பட்ட தரவின் தற்செயலான, அங்கீகரிக்கப்படாத அல்லது சட்டவிரோத அழிப்பு, இழப்பு, மாற்றம் அல்லது வெளிப்படுத்தலைத் தடுக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. எங்கள் ஊழியர்களும், ஒப்பந்த கூட்டாளிகளும் கடுமையான ரகசிய நெறிமுறைகளைப் பின்பற்றுகிறார்கள், மேலும் தகவல்களை அறிந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் மட்டுமே உங்கள் தனிப்பட்ட தரவை அணுகி செயலாக்குவார்கள்.

## VIII. மூன்றாம் தரப்பு விற்பனையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுடன் நாங்கள் எவ்வாறு பணியாற்றுகிறோம்?

எங்கள் ஆட்சேர்ப்பு செயல்முறையை ஆதரிக்கவும் மேம்படுத்தவும், பல்வேறு முறைகளில் எங்களுக்கு உதவும் மூன்றாம் தரப்பு வழங்குநர்களின் சேவைகளை நாங்கள் ஈடுபடுத்துகிறோம். இந்த வழங்குநர்கள் எங்கள் சார்பாக உங்கள் தனிப்பட்ட தரவை செயலாக்கலாம். இந்த மூன்றாம் தரப்பினரின் சில எடுத்துக்காட்டுகள் பின்வருவனவற்றில் அடங்கும்:

- விண்ணப்பதாரர் கண்காணிப்பு அமைப்பு வழங்குநர்கள்
- ஆட்சேர்ப்பு சேவை வழங்குநர்கள்
- வேலைவாய்ப்பு நிறுவனங்கள்
- நேர்காணல் மற்றும் மதிப்பீடுகளை எளிதாக்கும் விற்பனையாளர்கள்
- வழக்கறிஞர்கள் மற்றும் ஆலோசகர்கள் உட்பட குடியேற்ற ஆலோசகர்கள்
- அறிக்கை மற்றும் பகுப்பாய்வு சேவை வழங்குநர்கள்
- வேலைவாய்ப்புக்கு முந்தைய ஸ்க்ரீனிங் சேவைகள்

இந்த மூன்றாம் தரப்பினருடன் ஐரோப்பிய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிலையான ஒப்பந்த உட்பிரிவுகளுடனான விரிவான தரவு தனியுரிமை ஒப்பந்தங்களை நாங்கள் போட்டுளோம், மேலும் உங்கள் தகவலின் பாதுகாப்பை உறுதிசெய்ய, பொருந்தக்கூடிய சில நாடுகளைப் பற்றிய ஐரோப்பிய ஆணையத்தின் போதுமான முடிவுகளை நாங்கள் நம்பியுள்ளோம். இந்த வழங்குநர்கள் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்த வேண்டும் என்றும், ஒப்புக்கொள்ளப்பட்ட சேவைகளை வழங்குவதற்குத் தேவையானவற்றைத் தவிர வேறு நோக்கங்களுக்காக உங்கள் தகவலைப் பயன்படுத்துவதைத் தடைசெய்ய வேண்டும் என்றும் நாங்கள் கட்டாயப்படுத்துகிறோம்.

எங்கள் வேலைவாய்ப்பு போர்ட்டலில், நீங்கள் வேலைக்குச் சுலபமாக விண்ணப்பிக்க சில மூன்றாம் தரப்பு ஒருங்கிணைப்புகளை நாங்கள் செயல்படுத்துகிறோம் என்பதை நினைவில்கொள்ளவும். இந்த விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கும்போது, உங்கள் பெயர், தற்போதைய பதவி மற்றும் பலவற்றை உள்ளடக்கிய தகவல் உங்கள் ப்ரொஃபலைப் பயன்படுத்தி விண்ணப்பத்தில் தானாகவே நிரப்பப்படும். இறுதி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் முன், இவ்வாறு தானாகவே நிரப்பப்பட்ட எந்தத் தகவலையும் நீங்கள் திருத்தலாம் மற்றும்/அல்லது கூடுதல் கேள்விகளுக்கு பதிலளிக்கலாம்.

## IX. உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் எவ்வளவு காலம் வைத்திருப்போம்?

மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவு இனி தேவைப்படவில்லை எனில், நாங்கள் அதை உடனே நீக்குவோம். நீங்கள் வெற்றிகரமாக பணியமர்த்தப்பட்டால், உங்கள் தனிப்பட்ட தரவு மேக்னா-வின் பணியாளர் தனியுரிமைத் தகவலின்படி மாற்றப்பட்டு செயலாக்கப்படும். கூடுதலாக, உங்கள் உள்ளூர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பொறுத்து, சட்டப்பூர்வ வரம்பு காலங்களால் தீர்மானிக்கப்படும்படி, எங்களுக்கு எதிராக நீங்கள் உரிமைகோரல்கள் செய்யக்கூடிய காலத்திற்கு உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் தக்கவைத்துக்கொள்வோம். உதாரணமாக, ஐரோப்ப ஆணையத்தில், நாங்கள் பொதுவாக ஆறு மாதங்களுக்கு உங்களின் விண்ணப்பத் தரவைத் தக்கவைத்துக்கொள்கிறோம். எங்கள் தரவு தக்கவைப்பு நடைமுறைகள் பற்றிய விரிவான தகவல்களை நீங்கள் அறிய விரும்பினால், தயவுசெய்து எங்களைத் தொடர்புகொள்ளவும்.

## X. உங்கள் தனிப்பட்ட தரவு தொடர்பாக உங்களுக்கு உள்ள உரிமைகள் என்ன?

நீங்கள் வசிக்கும் நாடு/பிராந்தியத்தின் சட்டங்களைப் பொறுத்து, உங்கள் தனிப்பட்ட தரவு தொடர்பாக பின்வரும் உரிமைகள் உங்களுக்கு உண்டு:

- தகவல் அணுகலுக்கு உட்பட்ட தரவின் உரிமை
- தரவைச் சரிசெய்யும் உரிமை
- தரவை அழிக்கும் அல்லது அநாமதேயமாக்கும் உரிமை
- தரவை செயலாக்கத்தைக் கட்டுப்படுத்தும் உரிமை
- தரவு பெயர்வுத்திறனுக்கான உரிமை

உங்களின் தரவு தனியுரிமை பிரச்சனைகள் தொடர்பாக புகாரளிக்க நீங்கள் எங்களை அல்லது உங்களின் தரவு தனியுரிமை மேற்பார்வை வல்லுநரை நேரடியாக தொடப்புக்கொள்ளும் விருப்பமும் உங்களுக்கு உள்ளது.

உங்கள் வேலைவாய்ப்பு ப்ரொஃபலை நீக்க விரும்பினால், தயவுசெய்து மேக்னாவின் ஆட்சேர்ப்பு குழுவை workdaydataprivacy@magna.com என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

## XI. ஒப்புதலைத் திரும்பப் பெறும் உரிமை

தனிப்பட்ட தரவின் செயலாக்கம் உங்கள் ஒப்புதலின் அடிப்படையில் இருந்தால், எதிர்காலத்தில் எந்த நேரத்திலும் இந்த ஒப்புதலை நீங்கள் திரும்பப் பெறலாம்.

## XII. தனிப்பட்ட வழக்குகளில் ஆட்சேபனை தெரிவிக்கும் உரிமை

உங்கள் சூழ்நிலையிலிருந்து எழும் காரணங்களுக்காக, உங்கள் தனிப்பட்ட தரவை செயலாக்குவதற்கு எந்த நேரத்திலும் ஆட்சேபனை தெரிவிக்க உங்களுக்கு உரிமை உண்டு. தரவு செயலாக்கம் இதன் அடிப்படையில் நடைபெறாவிட்டால், மேக்னா உங்கள் தனிப்பட்ட தரவை இனி செயலாக்காது:

- பொது நலனுக்காகவோ அல்லது கட்டுப்பாட்டாளரிடம் உள்ள அதிகாரப்பூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்காகவோ செய்யப்படும் ஒரு பணியைச் செயல்படுத்துவதற்கு செயலாக்கம் அவசியம், அல்லது
- உங்கள் நலன்கள் அல்லது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரம் பாதுகாக்கத் தேவைப்படும் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு மீறப்படும் சந்தர்ப்பங்களில், குறிப்பாக தரவு குழந்தை தொடர்பான தகவலாக இருக்கும்பட்சத்தில், தவிர, மேக்னா அல்லது மூன்றாம் தரப்பினரின் சட்டப்பூர்வ நலன்களைப் பாதுகாக்க செயலாக்கம் செய்வது அவசியம்,
- சட்ட உரிமைகோரல்களை நிறுவுதல், செயல்படுத்துதல் அல்லது பாதுகாப்பிற்கு.

ஆட்சேபனை படிவம் பூர்த்தி செய்யாமலேயே தெரிவிக்கப்படலாம், மேலும் அது குறித்து தெரிவிக்கப்பட வேண்டிய முகவரி:

**மேக்னா இன்டர்நேஷனல் இன்க்.**
337 மேக்னா டிரைவ்,
அரோரா, ON L4G 7K1, கனடா
dataprivacy@magna.com

## XIII. குக்கீகள்

ஒரு வலைத்தளம் - நீங்கள் அதனைப் பார்வையிடும்போது - உங்கள் மொழி விருப்பத்தேர்வுகள் அல்லது உள்நுழைவுத் தகவல் மாதிரியான உங்களின் தகவல்களை நினைவில் கொள்வதற்காக உங்கள் சாதனத்தில் சேமிக்க உங்கள் உலாவியைக் கேட்கும் சிறிய கோப்புகள் தான் குக்கீகள் என்பதாகும். வலைத்தளங்கள் செயல்பட அல்லது மிகவும் திறமையாக செயல்படவும், தளத்தின் உரிமையாளர்களுக்குத் தகவல்களை வழங்கவும் அவை பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பிரிவில் நாங்கள் பயன்படுத்தும் குக்கீகள் மற்றும் அவற்றை ஏன் பயன்படுத்துகிறோம் என்பதை விளக்குவோம்.

There are different types of cookies in use on our career site: strictly necessary cookies and cookies related to optional features.

***கண்டிப்பாக தேவையான குக்கீகள்***
*இந்த குக்கீகள் வலைத்தளம் செயல்பட அவசியமானவை மற்றும் எங்கள் அமைப்புகளில் அவற்றை ஸ்விட்ச் ஆஃப் செய்யமுடியாது. உள்நுழைவது அல்லது படிவங்களை நிரப்புவது போன்ற சேவைகளுக்கான கோரிக்கைக்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக மட்டுமே அவை பொதுவாக அனுப்பப்படும். இந்த குக்கீகளைத் தடுக்க அல்லது குக்கீக்கள் பற்றி உங்களிடம் எச்சரிக்கும் உலாவியை நீங்கள் அமைக்கலாம், ஆனால் அப்படி செய்வதினால் தளத்தின் ஒரு சில பகுதிகள் வேலை செய்யாது. இந்த குக்கீகள் எந்த தனிப்பட்ட தரவையும் சேமிக்காது.*

*நாங்கள் எந்தெந்த கண்டிப்பாக தேவையான குக்கீகளைப் பயன்படுத்துகிறோம், அவை எப்போது காலாவதியாகும்?*

- *அமர்வு மேலாண்மை குக்கீகள் - செயலற்ற நிலைக்குப் பிறகு அமர்வுகளை நேரமாக்குவதற்கான நேர முத்திரை குக்கீகளுடன் பயனர், சாதனம் மற்றும் அமர்வு ஐடி குக்கீகள். இந்த குக்கீகள் அமர்வின் முடிவில் காலாவதியாகும்.*
- *ரௌட்டிங் குக்கீகள் - சேவையின் நிலைத்தன்மைக்காக ஒரே அமர்வுக்கான கோரிக்கைகளை ஒரே சேவையகத்திற்கு அனுப்புவதற்கு இவைப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த குக்கீகள் அமர்வின் முடிவில் காலாவதியாகும்.*
- *பயன்பாட்டு பாதுகாப்பு மேலாண்மை (ASM) குக்கீகள் - பாதுகாப்பு தாக்குதல்களிலிருந்து வலை பயன்பாடுகள் மற்றும் உள்கட்டமைப்பைப் பாதுகாக்க உதவும். இந்த குக்கீகள் அமர்வின் முடிவில் காலாவதியாகும்.*

***விருப்ப அம்சங்களுடன் தொடர்புடைய குக்கீகள்***

*எங்கள் விண்ணப்பதாரர் கண்காணிப்பு அமைப்பு (ATS) எங்கள் தொழில் தளத்தில் விருப்ப அம்சங்களை உள்ளமைக்க எங்களுக்கு உதவுகிறது, இது கண்டிப்பாக தேவையான என வகைப்படுத்தப்படாத குக்கீகளைப் பயன்படுத்தலாம்.*

*இந்த வகையான குக்கீகளைப் பயன்படுத்தக்கூடிய பல உள்ளமைக்கக்கூடிய அம்சங்கள் உள்ளன:*

- *லிங்குடுஇன் குக்கீகள்: பயனர்கள் தங்கள் லிங்குடுஇன் ப்ரொஃபைலைப் பயன்படுத்தி நிறுவனத்தில் உள்ள வேலைவாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்க எங்கள் தளத்தை உள்ளமைக்க எங்களுக்கு உதவுகிறது. லிங்குடுஇன் மூலம் விண்ணப்பிக்கவும் அம்சம் உள்ளமைக்கப்பட்டிருந்தால், லிங்குடுஇன் இறுதி பயனரின் சாதனத்தில் பல குக்கீகளை வைக்கிறது. லிங்குடுஇன் பயன்படுத்தும் குக்கீகளின் சரியான வகை மற்றும் கால அளவு அவ்வப்போது மாறக்கூடும் என்பதால், 'லிங்குடுஇன் மூலம் விண்ணப்பிக்கவும்' செயல்பாட்டுடன் தொடர்புடைய குக்கீகளின் முழு விவரங்களுக்கு லிங்குடுஇன் இடம் நேரடியாக விசாரிக்க நாங்கள் உங்களுக்குப் பரிந்துரைக்கிறோம். மேலும் தகவலுக்கு, லிங்குடுஇன் குக்கீ கொள்கையில் 'லிங்குடுஇன்-ஐ ஆன் மற்றும் ஆஃப் செய்யும் பிளக்-இன்ஸ்' பகுதியை இங்கே அணுகலாம்:* https://www.linkedin.com/legal/cookie-policy.

***நீங்கள் குக்கீகளை நிராகரித்தால் என்ன நடக்கும்?***
*எங்கள் தொழில் தளத்தைப் பார்வையிடும்போது எந்தகே குக்கீகளை நீங்கள் ஏற்கிறீர்கள் அல்லது நிராகரிக்கிறீர்கள் என்பதை நீங்கள் கட்டுப்படுத்தலாம். நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது இங்கே:*

- ***கண்டிப்பாக தேவையான குக்கீகள்**: வலைத்தளம் சரியாக செயல்பட இந்த குக்கீகள் அவசியம். பாதுகாப்பு, அமர்வு மேலாண்மை மற்றும் அடிப்படை தள செயல்பாடு போன்ற முக்கிய*

*சேவைகளை வழங்க அவை தேவைப்படுவதால், குக்கீ பேனர் மூலம் அவற்றை நீங்கள் விலக்க முடியாது. இருப்பினும், உங்கள் உலாவி அமைப்புகள் மூலம் அவற்றைத் தடுக்கலாம், இருப்பினும் அவ்வாறு செய்வது தளத்தின் ஒரு சில பகுதிகள் சரியாக வேலை செய்வதை நிறுத்தக்கூடும்.*

- ***விருப்ப குக்கீகள்**: இவற்றில் பகுப்பாய்வு தொடர்பான குக்கீகளும்* LinkedIn *ஒருங்கிணைப்பு போன்ற மூன்றாம் தரப்பு அம்சங்களும் அடங்கும். இந்த குக்கீகளை அனுமதிக்கலாமா வேண்டாமா என்பதை நீங்கள் தேர்வு செய்யலாம்:*
  - *நீங்கள் விருப்பத்தேர்வு குக்கீகளை **ஏற்றுக்கொண்டால்**, உங்கள் அனுபவத்தை மேம்படுத்தவும் எங்கள் சேவைகளை மேம்படுத்தவும் நாங்கள் லிங்குடுஇன் அம்சங்களைப் பயன்படுத்தலாம்.*
  - *நீங்கள் விருப்பத்தேர்வு குக்கீகளை **நிராகரித்தால்**, இந்த அம்சங்கள் உங்கள் அமர்வுக்கு முடக்கப்படும், மேலும் உங்கள் விருப்பத்தை நினைவில் கொள்ள ஒரு குக்கீ சேமிக்கப்படும்.*
  - *நீங்கள் குக்கீ பேனரைப் **புறக்கணித்தால்**, உங்கள் அமர்வின் போது விருப்பத்தேர்வு குக்கீகள் பயன்படுத்தப்படாது.*

*உங்கள் உலாவி அமைப்புகளை சரிசெய்வதன் மூலமோ அல்லது குக்கீ பேனரை மீண்டும் பார்ப்பதன் மூலமோ (கிடைத்தால்) எந்த நேரத்திலும் உங்கள் குக்கீ விருப்பங்களை மாற்றலாம்.*

## XIV. இந்தத் தரவு தனியுரிமைத் தகவலில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?

*இந்தத் தரவு தனியுரிமைத் தகவலை நாங்கள் அவ்வப்போது புதுப்பிக்கலாம் என்பதை நினைவில்கொள்ளவும். ஏதேனும் சமீபத்திய மாற்றங்கள் குறித்து தொடர்ந்து தெரிந்துகொள்ள இந்தத் தகவலை அவ்வப்போது மதிப்பாய்வு செய்வது நல்லது.*

*இந்த ஆட்சேர்ப்புத் தரவு தனியுரிமைத் தகவல் கடைசியாக ஜூலை* 2025 *இல் புதுப்பிக்கப்பட்டது.*